**செய்தி வெளியீடு– 709                13.10.2009**

# சர்க்கரைத் துறைப் பணியாளர்கள் 9 ஆயிரத்து 727 பேருக்கு 20 சதவீத போனஸ் மற்றும் கருணைத் தொகை 6 கோடியே 90 இலட்சம் ரூபாய்!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

சர்க்கரைத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்கள் 9 ஆயிரத்து 727 பேருக்கு போனஸ் சட்டத்தில் வரையறுக்கப் பட்டுள்ள ஊதிய உச்சவரம்பான 10 ஆயிரம் ரூபாய் என்பதைத் தளர்வு செய்து 8.33 சதவீத போனஸ் மற்றும் 11.67 சதவீத கருணைத் தொகை சேர்த்து மொத்தம் 20 சதவீத போனஸ் வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (13.10.2009) ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணையின்படி, சர்க்கரைத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்கள் 9 ஆயிரத்து 727 பேருக்கு 6 கோடியே 90 இலட்சம் ரூபாய் 2008–2009 ஆம் ஆண்டுக்கான போனஸாக வழங்கப்படும்.

****